RECEIVED
1979-8-13
PERIODICAL DIVISION
UNIVERSITY ... CAMPUS * LIBRARY *

New Cambridge Tutorrial Institutes
Thirunelvely Junction
5-8-79-ல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
1. Short Hand & Typing.
2. பரதநாட்டியம், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல்.
3. சங்கீதம், திருமுறை(தேவாரம்) பண்பயிற்சிநெறி.
4. G C E [O/L] [A/L] வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்.
புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.
பிரசுரகர்த்தா :-
V. M. PAKKIANATHAN

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

the EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஆடி 28 றம்ழான் 19 இதழ் 182
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-8-79

## அணைக்கட்டு உடைத்து 500 பேர் பலி!

[புதுடில்லி]

இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்தின் ஒருபகுதியில் நேற்றுக்காலை அணைக்கட்டு உடைந்ததால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் ஐந்நூற்றுக்கும் அதிகமானவர்கள் பலியானார்கள்! பல நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதியில் பன்னிரண்டு அடி வெள்ளம் நிற்பதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க இராணுவம் விரைந்துள்ளது.

இதற்கிடையே உத்தரப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்யும் கடும் மழையினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மருந்து தட்டுப்பாடு

# விரைவில் நீங்கும்!

## சுகாதார அமைச்சருக்கு

### யாழ். அரசு அதிபர் அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நீண்டகாலமாக நிலவும் மருந்துத்தட்டுப்பாட்டை உடனடியாக ஒரு முடிவுக்குக்கொண்டுவர யாழ். அரசாங்க அதிபர் திரு யோகேந்திரா துரைசுவாமி நடவடிக்கைமேற்கொண்டுள்ளார்.**

"சுகாதார அமைச்சர் திரு. காமினிஜயசூரியாவுக்கு திரு. யோகேந்திரா துரைசுவாமி அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதத்தில் அத்தியாவசியமான சகல மருந்துகளையும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு உடனடியாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்"

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நீண்டகாலமாக அத்தியாவசியமான பல மருந்துவகைகளும் வேறு சில மருந்துகளும் பற்றாக்குறையாகவிருப்பதும்; சிலசந்தர்ப்பங்களில் முக்கிய மருந்துகளே இல்லாமற்போவதும்; சத்திர சிகிச்சைகள் கூடத் தடைப்படுவதும் ஒரு வழக்கமாகிவிட்டது வாசகர்கள் தெரிந்ததே. இதனைத் தீர்த்துவைக்க இப்பொழுது அவசர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் வடபிரதேச பாதுகாப்பு தளநிர்வாக அதிகாரியும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, சுகாதார அமைச்சருக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைத்துள்ள அவசரக்கடிதத்தில், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நீண்டகாலமாக நிலவும் மருந்துத்தட்டுப்பாட்டையும், அதனால் நோயாளருக்கு ஏற்படும் பயங்கர விளைவுகளையும் விளக்கமாகச் சுட்டிக்காட்டி, அத்தியாவசியமான மருந்துகளுடன் மற்றைய சகலமருந்து வகைகளையும் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு உடனடியாக அனுப்பிவைக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

திருநெல்வேலி திருட்டு;

# ரூபா 87,000 நகைகள்மீட்பு; கார்ச்சாரதி றிமாண்டில்!

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியிலுள்ள வீடொன்றில் திருட்டுப்போனசுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளில் சுமார் 87 ஆயிரம் பெறுமதியான நகைகளை யாழ்ப்பாணம் பொலிசார் மீட்டுள்ளனர்.

திருநெல்வேலி, பலாலி வீதி, 83ம் இலக்க வீட்டில் வசிக்கும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரின் மனைவி திருமதி மகாலக்ஷ்மி ...நாதனுக்குச் சொந்தமான சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியுள்ள நகைகள் திருட்டுப்போனது. இது தொடர்பாகப் பொலிசாருக்கு செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு ஜெருணி குணசேகரா, குற்றத்தடுப்புப்பகுதி பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் டபிள்யு ஜி. பிரேமதாச சப்-இன்ஸ்பெக்டர் மூத்துபண்டா, கான்ஸ்டபிள்கள் குணரத்தினம், மகேந்திரன் ஆகியோர் விசாரணை நடத்தினர்.

விசாரணையின்பின் சந்தேகத்தின்பேரில் அவ்வீட்டில் கார்ச்சாரதியாக வேலைபார்த்த சின்னத்தம்பி ஞானலிங்கத்தைப் பொலிசார் கைதுசெய்தனர்.

திருநெல்வேலி அம்பாள் வீதியில் சந்தேகநபர் புதிதாகக்கட்டியுள்ள வீட்டிற்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த 37 பவுண் தங்கநகைகளைப் பொலிசார் மீட்டதுடன், மன்னாருக்குச் சென்ற பொலிஸ் கோஷ்டி சுமார் 15,000 ரூபா பெறுமதியான 12 பவுண் தங்க நகைகளை மீட்டுள்ளனர். தாலிக்கொடி, சங்கிலி, காப்பு மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள இரு பிரபல நகைக்கடைகளிலிருந்தும் நகைகள் மீட்கப்பட்டதுடன் கடைஉரிமையாளர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டனர்.

சந்தேகநபரான சின்னத்தம்பி ஞானலிங்கம் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்; விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [கொ]

## ரூ.40,000 பெறுமதிநகைகள் திருட்டு!

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரிலுள்ள பிரபல நகைக்கடை உரிமையாளர் ஒருவரின் வீட்டில் சுமார் நாற்பதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டதைத் தொடர்ந்து நகைக்கடை உரிமையாளரின் மகனும் அவரது நண்பர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டு பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட நகைக்கடை உரிமையாளர் தமது புகாரில் இருட்டுகளுக்குப் பயந்து கடையில் உள்ள சில முக்கிய நகைகளை வீட்டில் வைத்திருந்ததாகவும் சம்பவதினம் நகை வைக்கப்பட்டிருந்த பெட்டியைத் திறந்து பார்த்தபோது பெட்டியில் வைக்கப்பட்டிருந்த நகைகளில் பதினெட்டுத் தங்கநகைகளைக் காணவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சில நகைகள் விற்கப்பட்டதாகவும் ஒருசில நகைகள் அடைவுவைக்கப்பட்டிருப்பதாக தாம் அறிவதாகவும் அடைவுவைக்கப்பட்டவை போக மிகுதி நகைகள் ஒருவரிடம் இருப்பதாகவும் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

யாழ். குற்றத்தடுப்புப் பகுதிப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஜீ. பிரேமதாசா, சப்இன்ஸ்பெக்டர் உடுகம்பல, கான்ஸ்டபிள்கள் எஸ். குண

[6-ம் பக்கம் பார்க்க]

காசோலை மோசடி!

## சந்தேக நபரை வங்கிஊழியர் துரத்திப் பிடித்தார்

[யாழ்ப்பாணம்]

வங்கியில் காசோலை மோசடி செய்த ஒருவர் வங்கி ஊழியர்களால் துரத்திப் பிடிக்கப்பட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்டார். இச்சம்பவம் மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் இலங்கை வங்கியில் கணக்குவைத்துள்ள ஒருவர் தனது காசோலைப் புத்தகத்தைத் தொலைத்துவிட்டதாகவும், அப்புத்தகத்தின் பெயரால் எவருக்கும் கொடுக்கல் வாங்கல் செய்யவேண்டாமெனவும் கடந்த வியாழக்கிழமை வங்கிக்கு அறிவித்திருந்தாராம்.

அவரது வைப்புப்பணத்தில் வியாழக்கிழமை 956 ரூபா எடுக்கப்பட்டிருந்தது. அடுத்தநாள் வெள்ளிக்கிழமை ஒருவர் மேற்படி தொலைந்த காசோலைப் புத்தகத்திலிருந்து எழுதப்பட்ட 900 ரூபா பெறுமதியான காசோலை ஒன்றை வங்கிக்குக் கொண்டுவந்து மாற்ற முற்பட்டபோது அவர் மீது சந்தேகங்கொண்ட வங்கி ஊழியர் ஒருவர் அவரை மடக்கமுற்பட்டபோது சந்தேக நபர் நழுவி ஓடிவிட்டாராம். ஆனால் வங்கிஊழியரும் அவரை விட்டபாடில்லை!

சந்தேகநபரைப் பிடிக்க முற்பட்டபோது சந்தேகநபரும் வங்கிஊழியரும் வீதியில் புரண்டனராம்! இறுதியில்வங்கி ஊழியரால் அச்சந்தேகநபர் பிடிக்கப்பட்டு வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் பொலிசில் ஒப்படைக்கப்பட்டாராம்.

பொலிஸ் விசாரணையில் சந்தேகநபர் ஏற்கனவே ஐந்து காசோலைகளில் கையெழுத்திட்டு பணமோசடி செய்தது தெரியவந்துள்ளது. [கொ]

## கடைசிநேர செய்திகள்

(சென்னை)

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் இவ்வருட இறுதிக்குள் நடைபெறும் என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு காளிமுத்து நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

0 0 0

(பீகிங்)

சீனாவின் ஷிங்கியாங் மாகாணத்தின் ஒரு பகுதியில் அகழ்வுவேலையில் ஈடுபட்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சில சடலங்களை நேற்றுமுன்தினம் கண்டெடுத்துள்ளனர். இச்சடலங்களின் தோல், கம்பளி ஆடைகள் மற்றும் தோலினால் தயாரிக்கப்பட்ட பாதணிகள் எல்லாமே பழுதடை

(2-ம் பக்கம் பார்க்க)

## இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயிலில் இன்று 30-வது நாள் மண்டலாபிஷேகம் காலை 9 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 5-30 மணிக்கு சாயங்காலப் பூசையைத் தொடர்ந்து "குலதெய்வம்" என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரையாற்றுவார். 6-30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் சுவாமி உள்வீதிவலம் வருதலும் நடைபெறும். [கொ]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட மொரிஸ் ஒக்ஸ்போட் (டீசல்) கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சந்திரசேகரமுதலி, தபால் கந்தோர் அருகாமை, வரணி. 3271

சொந்தப் பாவனையில் உள்ள CN 9900 தொடர் இலக்கமுள்ள A 40 கார் நல்ல நிலைமையில் விற்பனைக்குள்ளது. தொடர்பு: செல்வத்துரை முருகதாஸ், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். 3266

அவரி 5 அந்தர் தராசு படி செற்றுடன் நல்ல நிலையில் உள்ளது. ஆ. நல்லதம்பி, 75, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 3281

இரண்டு சட்டி கலப்பை (டிஸ்க்) பல வேலை செய்யும் லெவலர் றொட்டர்வேற்றர் ஆகிய உழவு யந்திர உபகரணங்கள் நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. T பூபாலசிங்கம், கோப்பாய் றோட், உரும்பராய். 3289

33 ஸ்ரீ 6646 மொறிஸ் LD வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: திலகம் ஸ்ரோர்ஸ், மார்க்கட், ஊர்காவற்றுறை. 3293

### தேவை

தேவன்ஸ் சீயாக்காய் பவுடர். தேவன்ஸ் பற்பொடி பைக்கற் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தேவாஸ் இறைண்டிங் மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3274

### மாநகரசபை யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 31-8-79 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை, யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) மணிக்கூட் தோட்டம், துண்டி ஆகிய பகுதிகளில் மூன்று மதகுகள் அமைத்தல்.

(ஆ) பொம்மை வெளி, கன்னாபுரம் ஆகிய பகுதிகளில் மலகூடம் அமைத்தல்.

(இ) முத்திரைச்சந்தையில் மதில் சுவர் அமைத்தல்.

ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப்பணமாக ரூபா நூறும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா இருபத்தைந்தும் செலுத்தியதின் பேரில் 30-8-79 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ்ப்பாண மாநகர சபை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்கள் மீது கேள்விகள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபையுடனோ அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களுடனோ ரூபா ஐம்பதினாயிரத்துக்கு மேல் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்திருப்பதற்குரிய அத்தாட்சியை நிரூபித்ததின் பேரில் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை மாநகர சபை மராமத்துப் பொறியியலாளரிடம் விண்ணப்பிப்பதன் பேரில் அறிந்துகொள்ளலாம்.

க. சிவஞானம்
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

நகரமண்டபம்,
யாழ்ப்பாணம்.
16-8-79. 3280

## ப. நோ. கூ. ச. புதிய கட்டிடம்

[உடுப்பிட்டி]

கட்டைவேலி - நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இரண்டு மாடிக் கட்டிடம் இம்மாதம் 24ந் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள இப்புதிய நவீன வசதிகள் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடத்தை உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் திறந்துவைப்பார்.

இப்புதிய இரண்டு மாடிக் கட்டிடம் கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனவு நிலையத்துக்கு அருகாமையில் அமைந்துள்ளது. [உ]

## மீன்பிடித் தொழில் அபிவிருத்தி

[புலோலி]

மீனவர்களின் வலைத்தட்டுப்பாட்டை நீக்கி மீன் பிடித்தொழிலை அபிவிருத்தியடையச் செய்ய கடற்றொழில் அமைச்சு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதற்கிணங்க இந்த ஆண்டில் 30 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் இறக்குமதி செய்யப்படுமென்றும், மேலும் 70 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

தளவாட வழங்கலுக்காக இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர்களினால் கேள்விகள் பெற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பாக 250-00 ரூபாவும், மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக 50-00 ரூபாவும் செலுத்தி 1979-08-31 ஆம் தேதி நண்பகல் 12-00 மணி வரை இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளரின் [நிர்வாகம்] அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய உரிய படிவங்களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது வேறு ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் தளவாட வேலையைச் செய்வதற்கென பதிவுசெய்து கடந்த மூன்று ஆண்டுகளில் திருப்திகரமாகப் பூர்த்தியாக்கியமைக்கான சான்றை அளிக்கும் ஒப்பந்தகாரர்களுக்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

பதிற் பதிவாளர்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1979-08-10. 3288

"சம்பள விஷயத்தில்

# சேவைமூத்த ஆசிரியர்க்கு நியாயம் வழங்கவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு 1-5-78 முதல் சமசம்பளம் வழங்கப்பட்டபோது, பயிற்றப்பட்டு 13 வருட சேவையை முடித்த ஆசிரியர்களும் தற்போது பயிற்சியை முடித்து வெளியேறும் முதலாம் வருட ஆசிரியர்களும் ஒரே சம்பளத்தைப் பெறுகின்ற இந்த அநீதியைப் போக்க சேவை மூத்த ஆசிரியர்களுக்கு முழுச் சேவைக்காலங்களுக்குமான படியேற்றங்கள் வழங்கமுடியாது போனாலும் 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒரு படியேற்றம் என்ற வீதத்திலாவது உயர்ச்சி வழங்கி ஓரளவாவது நியாயம் பெற வழிசெய்யவேண்டும்"

இவ்வாறு இலங்கை வித்தியாலய தமிழ் அதிபர் சங்கத் தலைவர் திரு. வ. செல்லத்துரை தலைமையில் அரச சம்பள மீளாய்வுக் குழுமுன் தோன்றி சாட்சியமளித்த இலங்கை வித்தியாலய தமிழ் அதிபர் சங்கம் வற்புறுத்தியது.

செயலாளர் திரு சி. சின்னராசா நிர்வாகச் செயலாளர் திரு. இ. சின்னத்தம்பி ஆகியோர் கொண்ட கோஷ்டி தூதுக்குழு பின்வரும் விடயங்களைச் சமர்ப்பித்து நிவாரணமளிக்கும்படி வற்புறுத்தியது.

எஸ். பி. டி. சில்வா ஆணைக்குழுவின் சம்பளச் சிபார்சு உதவி ஆசிரியர்களுக்கு 1-7-74ல் இருந்து செயற்பட அதிபர்களுக்கு 1-4-75லிருந்து செயற்படுத்தப்பட்டமையினால் அதிபர்கள் பாதிப்படைந்தது பற்றியும், முக்கியமாய் 5ம் தர அதிபர்கள், உதவி ஆசிரியர்களிலும் பார்க்க 1 1/4 வருடம் பின்தள்ளப்பட்டமை பற்றியும் சுட்டிக்காட்டி எங்களுக்கும் 1-1-74லிலிருந்து செயற்படுத்த வழிவகை செய்யவேண்டும்.

3ம் 4ம் 5ம் தர அதிபர்களின் ஆரம்பச் சம்பளங்களுக்கிடையிலான சம்பள இடைவெளி குறைக்கப்படுவதுடன், 2ந் தர அதிபரின் ஆரம்பச் சம்பளம் 3ந் தர அதிபரின் ஆரம்பச் சம்பளத்திலும் குறைந்து காணப்படுவது உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

ஆசிரியர்களும் அதிபர்களும் உச்சிச் சம்பளத்தைப் பெறும் காலஎல்லை குறைக்கப்படவேண்டும்.

### 5ம் தர அதிபர்

5ம் தர அதிபர் சம்பளமும் உதவி ஆசிரியர் பெறும் சம்பளமும் ஒரே மாதிரியாயிருப்பதாலும் 4ந் தர அதிபரும் 5ந் தர அதிபரும் ஒரேவித பாடசாலையில் ஒரேவித வேலைகளைச் செய்வதாலும் 5ம் தர அதிபர் பதவி என்று ஒன்று இருக்க வேண்டிய அவசியமில்லை. அது நீக்கப்படவேண்டும். அது நீக்கப்படமுடியாதவிடத்து 5ம் தர அதிபர் 5 வருடம் திருப்திகர சேவைசெய்தபின் அவரை 4ம் தர அதிபர் பதவிக்கு நியமிக்க வேண்டும். இதேபோல் 4ந் தர அதிபர் இருதரங்களிலும் மொத்தம் 10 வருட சேவை செய்தால் 3ம் தர அதிபர் பதவியிலிருக்கவேண்டும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு அதிஉயர்ந்த பதவி 3ம் தர அதிபர் பதவியே. எனவே 3ம் தர அதிபர் பதவி பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கே கொடுக்கப்படவேண்டும். தவிர்க்கமுடியாதவிடத்து 75 வீதமாவது பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டும்.

சமசம்பளத் திட்டத்தால் பாதிப்படைந்த சேவைமூத்த ஆசிரியர்கள் 60 வயதுவரை தான் சேவைசெய்தாலும் தமது உச்சிச் சம்பளத்தைப் பெறமுடியாது. எனவே எல்லா ஆசிரியர்களுக்கும் 60 வயது வரை சேவை நீடிப்பு வழங்க வேண்டும்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்துடன் ஆசிரியர் நியமனம்பெற்றவர்கள் குறிக்கப்பட்ட காலத்தின் பின் பயிற்சிக் கலாசாலைகளுக்குச் செல்கிறார்கள். அங்கு படிப்பித்தல் முறைகள் அதிகம் பயிற்றுவிக்கப்படுகின்றனவே தவிர பாடங்கள் படிப்பிக்கப்படுவதில்லை. ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு விசேட பயிற்சியளிப்பதுபோல் தமிழ், சிங்களம் ஆகிய பாடங்களுக்கும் விசேட பயிற்சியளிக்கப்படவேண்டும்.

வங்கியிலிருந்து சம்பளத்தைப் பெற்று பாடசாலை கொண்டுசென்று உதவி ஆசிரியர்களுக்கு வழங்குவதால் அதிபர்களுக்கு ஏற்படும் செலவை அரசாங்கம் கொடுக்கவேண்டும்.

கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் கருத்தரங்குகள், வட்டார அதிகாரிகளால் கூட்டப்படும் கூட்டங்கள் என்பவற்றுக்குச் செல்லும் செலவினங்கள் யாவும் அரசாங்கம் பொறுக்கவேண்டும்.

தாமாக விரும்பிக் கேட்டோ அல்லது கேளாமலோ இடமாற்றம்பெற்றுச் செல்லும் எல்லா ஆசிரியர்க்கும் பிரயாணச் செலவு வழங்கப்படவேண்டும்.

இவ்வேண்டுகோள்களை அனைத்தையும் பரிசீலித்து ஆவனசெய்வதாகக் குழு உறுதியளித்துள்ளது. [கா]

கெருடாவில் கொலை வழக்கு:

## எதிரிகள் இருவர் பிணையில் விடுதலை

[யாழ்ப்பாணம்]

கெருடாவில் கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்கள், நேற்று நீதிமன்றத்தினால், 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றைய விசாரணையின் போது. சந்தேக நபர்களான கே. பாலசிங்கம், கே. பாலகிருஷ்ணன் ஆகியோரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவராவர். விசாரணை யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எச். ஐமீல் முன்னிலையில் நடைபெற்றது.

அரச சட்டத்தரணி சந்தேக நபர்களை பிணையில் செல்வதற்கு ஆட்சேபம் தெரிவிக்காததையடுத்து நீதிபதி இருவரையும் பிணையில்செல்ல அனுமதித்தார்.

எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி திரு. ஆர். ச. தம்பிரெத்தினமும், சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரனும் ஆஜராஞர்கள். இவ்வழக்கில் சந்தேகநபர் மூவர் இன்னும் விளக்கமறியலில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [செ]

சுவாமி விபுலானந்தர்

## முத்திரை வெளியிட துரித நடவடிக்கை

[கொழும்பு]

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் முத்திரை அக்டோபர் 15-ம் திகதி வெளியிடப்படவிருக்கிறது.

பிரதேச அபிவிருத்தி தமிழ் மொழி அமுலாக்கல் இந்து சமய இந்து கலாச்சார அமைச்சர் திரு செ இராசதுரை இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

அமைச்சர் திரு இராசதுரையின் வேண்டுகோளை ஏற்று ஜனாதிபதி விபுலானந்த அடிகளுக்கு முத்திரை வெளியிடுமாறு தபால் அமைச்சரைப் பணித்தார்.

தபால் பகுதி செயலாளர் திரு. சேரசிங்கா அமைச்சர் திரு. இராசதுரையை சந்தித்து துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் உள்ள சிவானந்த வித்தியாலயத்தை விபுலானந்த அடிகளார் நிர்மாணம் செய்து 50 ஆண்டுகள் பூர்த்தியாகி பொன்விழா கொண்டாடப்படும் அக்டோபர் 15ம் திகதி விபுலானந்த அடிகள் முத்திரை வெளியிடப்படவிருக்கிறது. அன்றையதினம் இம்முத்திரை கொழும்பிலும், மட்டக்களப்பிலும் ஏககாலத்தில் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும். [உ]

## பஜனை ஏற்பாடு

[புலோலி]

தொண்டமானாறு இந்துமா மன்றத்தின் உதவியுடன் தொண்டமானாறு மகாவித்தியாலய சங்கீத ஆசிரியர், மாணவர்கள் ஆகியோர் அடங்கிய கோஷ்டி செல்வச் சந்நிதி கோவில் வருடாந்த உற்சவத்தின் முதல் பத்து நாட்களிலும் பஜனை நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது.

இதற்கான பயிற்சி வகுப்புக்களை பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரம பொதுச்செயலாளர் பிர இரத்தினசபாபதி நடாத்தி வருகிறார். சங்கீத ஆசிரியர் உட்பட 60 பேர் இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றவுள்ளார்கள். [உ]

## கடைசிநேர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாமல் இருந்தன என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளனர்.

[புதுடில்லி]

இம்மாதம் இருபதாம் திகதி நடைபெறும் நம்பிக்கை வாக்கெடுப்பில், சரண்சிங் அரசு நிச்சயம் தோல்வியடையும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் வாஜ்பாயி நேற்று இங்கு நிருபர்களிடம் தெரிவித்தார்.

## 44" அகல சாறி வெட்டு துண்டுகள்

பெருந்தொகையான நல்ல ரக சாறி [இறக்குமதி] வெட்டுத் துண்டுகள் கையிருப்பிலிருந்து விற்பனைக்குண்டு தேவையானோர் தொடர்புகொள்ளவும்.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.
3285

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் மின்சாரம், நீர்வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை வீட்டுடன் சேர்ந்த மலசலகூடம் விரும்பத்தக்கது விபரங்களுக்கு:

செ. தருமரெத்தினம் ஜே. பி.,
84, செட்டித்தெரு, நல்லூர்.
3294

## முத்திரைப்படிவ விநியோகம் இன்று ஆரம்பம்

# 75,00,000 மக்கள் பயனடையும் புதிய உணவு முத்திரைத் திட்டம்

## கூப்பன்களை இழந்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம்

— ஐயா சச்சிதானந்தம் —

அடுத்த மாதம் முதல் அரசாங்கம் அமுல் நடாத்தவுள்ள புதிய உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் நாடு பூராகவுமுள்ள எழுபத்தைந்து லட்சம் வறிய மக்கள் பயனடையவுள்ளார்கள். இத்திட்டத்தினை யாழ். மாவட்டத்தில் அமுல் நடாத்துவதற்கு ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலும், சகல ப. நோ. கூ. சங்கக் கிளைகளிலும், அங்கீகரிக்கப்பட்ட தனியார் பங்கீட்டுப்பொருள் விநியோக நிலையங்களிலும், மிகவும் சுறுசுறுப்பாக உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உணவு முத்திரைத் திட்டத்தின்கீழ், உணவுப் பொருட்களான அரிசி, மா, பாண், மண்ணெண்ணை, கருவாடு, தட்டாப்பருப்பு, லக்ஸ்பிறே பால், பால், விட்டாமின் போன்றமானிய அடிப்படையில், [அரசு வழங்கும் பொருட்களை, மக்கள் இலவசமாக மூன்று மாதங்களுக்கு அனுபவிக்கப் போகிறார்கள். ஒவ்வொரு மாதத்திற்கு வழங்கப்படும் உணவு முத்திரைகளை அந்தந்த மாதத்திலே பாவிக்கமுடியும். மண்ணெண்ணைக்கு வழங்கப்படும் உணவு முத்திரையைக் கொண்டு வேறு பொருட்களை வாங்கமுடியாது. குறிப்பிட்ட மாதத்திற்கு வழங்கப்படும் உணவுமுத்திரை அந்தந்த மாதத்தில் மாதத்தில் பாவிக்கப்படாவிட்டால், தேசிய சேமிப்பு வங்கிகளில் வைப்பிலிட வசதி செய்யப்பட்டுள்ளது. இது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பரிசாகமக்களுக்கு இடைக்கும் வரப்பிரசாதமாகும்.

### தகுதிபெற்றவர்கள்

உணவு முத்திரைத்திட்டத்தின்கீழ், நாம், தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும், உத்தரவுபெற்ற பங்கீட்டுப் பொருட்களை விநியோகிக்கும் தனியார் வியாபாரிகளிடமும், கூப்பன் புத்தகங்களையும் பங்கீட்டு அட்டைகளையும் வைத்திருப்பவர்கள், உணவுக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 171) பகுதி [6] ன் கீழான பிரகடன உணவு முத்திரைக்கான பிரதான குடியிருப்பாளரின் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள் விண்ணப்பப்படிவத்தை அவ்வப்பகுதி ப. நோ. கூ. சங்கக்கிளைகளிலும், அங்கீகாரம் பெற்ற தனியார் கடைகளிலும் இன்று திங்கட்கிழமை முதல், 20ந் திகதி வரை பெற்று அதனைப் பூர்த்தி செய்து கொடுக்கலாம்.

### கூப்பன்களை இழந்தவர்கள்

தற்போது கூப்பன்களை இழந்தவர்களும், தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து இப்பிரகடன விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் விசேஷமான வேறொரு விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட்டு விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். எவரும் பிரகடனப் படிவத்தைக் கேட்கின்றபோது எந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை முகாமையாளரோ அல்லது தனியார் பங்கீட்டுப் பொருள் விநியோக முகாமையாளரோ தரமுடியாது என மறுக்க முடியாது. இதனால், கடந்த முறை கூப்பன்களை இழந்தவர்களுக்கும் உணவு முத்திரை இடைக்கும் வாய்ப்புக் இட்டுகிறது.

உதாரணமாக ஏற்கனவே அரசாங்கம் அறிவித்த மாத வருமான அடிப்படையில் கூப்பன் புத்தகங்களை இழந்த ஐந்தோ அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குடும்பம், தற்போது இத்திட்டம் அமுலாகும்போது குறித்த வருமான எல்லைக்குள் அவர்களது வருமானம் அடங்காமல் இருந்தால் உணவுமுத்திரைப்பெற வசதியேற்படும் எவரும் பிரதான குடியிருப்பாளரில் தங்கியிருந்து அப்பிரதான குடியிருப்பாளர் இறந்தால் அல்லது அத்தகை வருமானத்தைப் பெறற ஒருவரில் அவரது குடும்பம் தங்கி இருந்து அவர் திருமணம் செய்து தனியான குடித்தனத்தை நடாத்திக் கொண்டிருந்தால் இவையாவற்றையும் உணவு முத்திரை பிரகடனப்படிவத்தில் திருத்தித் காட்டும் பட்சத்தில் உணவு முத்திரையைப் பெறத் தகுதியுடையவராவர்.

### இவர்கள்மீது தீவிரகண்காணிப்பு

இதே வேளையில் கூப்பன்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டபோது முன்னூறு ரூபாய்க்குக் குறையாத வருமானம் கணக்கிடப்பட்டு பின்னர் வருமானம் அதிகரித்தும் பங்கீட்டுப் பொருட்களைப் பெறுபவர்கள் மீண்டும் தீவிர கண்காணிப்புக் குட்படுத்தப்படுவர்.

### அந்த 50 ரூபா வருமானமல்ல

அரசாங்கம் விதித்த மாத வருமான எல்லை கணக்கிடும்போது தற்போது வேலையற்றிருக்கும் வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் வழங்கப்படும் விசேஷ வருமானப்படி ரூபா 50 வருமானத்துக்குள் கணக்கிடப்பட மாட்டாது.

குறிப்பிடப்பட்டகால எல்லைக்குள் குடியிருப்பாளர்கள் பிரகடனப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து ஒப்படைக்க தவறினால் பாரதூரமான சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். பூர்த்திசெய்யப்பட்ட பிரகடனப் படிவங்கள் 21ந் திகதி அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்படும். இவைகள் தகுந்த பரிசீலனையின் பின்னர் உணவு முத்திரைகளைப்பெற அருகதையுடையவர்கள் எனக்கருதப்படும் குடியிருப்பாளருக்கு உணவு முத்திரை வழங்கப்படும் உணவு முத்திரை மூன்றுமாதத்திற்கு ஒருதடவை வழங்கப்படும்.

உணவு முத்திரை, எட்டு வயதிற்குட்பட்வருக்கு 25 ரூபாய்க்கும், 8-12 வயதிற்குட்பட்டவருக்கு 20 ரூபாய்க்கும், 13-20 வயதிற்குட்பட்டவருக்கு 15 ரூபாய்க்கும் முத்திரை வழங்கப்படும். இதைவிட மண்ணெண்ணைக்கு 9 ரூபா 50 சத முத்திரை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படும். ஆகக் கூடிய உணவு முத்திரை ஒரு குடும்பத்திற்கு 139 ரூபா 50 சதமாக இருக்கும்.

உணவுமுத்திரைகளைப்பயன்படுத்தும்போது பாண் மண்ணெண்ணை தவிர்ந்த பொருட்களைத் தற்போது ப. நோ. கூ. சங்கக் கிளைகளிலோ அல்லது உத்தரவுபெற்ற தனியார் பங்கீட்டுப் பொருள் விநியோக நிலையங்களிலோ பெற்றுக் கொள்ளலாம். உணவு முத்திரைகளைப் பெறும்போதோ அல்லது உணவு முத்திரையைக்கொண்டு மேற்குறிப்பிட்ட பொருட்களைக் கொள்வனவுசெய்யும்போது எவரும் பணம் செலுத்தவேண்டிய தில்லை. ஆனால் குறிப்பிட்ட பொருட்களின் பெறுமதிக்கான உணவு முத்திரைகளைக் கொடுக்கவேண்டும்.

உணவு முத்திரை இம்மாதம் 26ந் திகதி முதல் 31ந் திகதி வரை விநியோகிக்கப்படும். (அ)

---

மக்கள் கருத்து

### இப்போதாவது உணர்ந்ததைப் பாராட்டுவோம்

நாட்டின் அபிவிருத்தி வேலைகள் பரவலாக்கப்பட்டு மாவட்ட ரீதியில் சிறப்பாக செயல்படுத்துவதற்கென ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு மாவட்ட அமைச்சர்களை நியமித்துசிறந்தமுறையில் செயலாற்றி வருகிறது இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம்.

ஏனைய மாவட்டங்களைப் போலல்லாது யாழ்ப்பாண மாவட்டத்துக்கு பல தேவைகள் உண்டென்பதை உணர்ந்துகொண்ட அரசு இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள முன்வராதபோது வெளி மாவட்டத்திலிருந்து ஒருவரை அமைச்சராக நியமித்தது.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை அமைச்சராக நியமிக்கவேண்டி ஏற்பட்டதால் தகுதியான யாழ். மாவட்டத்தின் தேவைகளை நன்குணர்ந்த ஒருவரை அரசாங்கம் மாவட்ட அமைச்சின் செயலாளராக நியமித்தது.

பல உலக நாடுகளில் இலங்கையின் சார்பில் பணியாற்றி தமது நாட்டுக்குப் பெருமை தேடித்தந்த திரு யோகேந்திரா துரைசுவாமி தமது சமுதாயத்திற்குப் பணியாற்றவென்றே காலந்தாழ்த்த பெரும்பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு எட்டுவருடங்கள் முன்னதாகவே பதவியைவிட்டு வந்தார்.

திரு யோகேந்திராவின் நிர்வாகத்திறமையும், பெருந்தகைமைகளையும் ஏற்கனவே நன்கு அறிந்திருந்ததாலேயே ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனா அவருக்கு யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளராகநியமித்தார். அவரது நியமனம் வடபகுதிமக்களுக்கு குறிப்பாக ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களுக்கு வாய்த்த ஒரு நல்ல சந்தர்ப்பமே என்பதை சகலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அவர் பதவியேற்று மிகக் குறுகிய காலத்திலேயே யாழ்ப்பாண மாவட்டம் அடைந்த அபிவிருத்தி பாராட்டுக்குரியது.

குறிப்பாக யாழ்: நுண்ணலைத் தொடர்புநிலையம் அமைப்பதற்கு அரசு மேற்கொண்டுவரும் துரித நடவடிக்கைகள், கன்பொல்லை மாதிரிக்கிராமத் திட்டம், தொகுதிக்குதோறும் புதிய வீடுகள் அமைக்கும் திட்டம், முழங்காவில் குழாய்க் கிணற்றுத்திட்டம் என்பன வற்றைக் குறிப்பிடலாம்.

அவருடைய திறமைகளுக்கு யாழ். மக்கள் அனைவருமே மதிப்பளிக்கவேண்டியது அவசியம். ஆனால் அண்மையில் ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து மக்கள் அவரைப் பாராட்டிச் செய்திகள் அனுப்பியதாக பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் பாராட்டுக்குரியதாகவுள்ளது கடந்த 9-8-79 'ஈழநாடு' பத்திரிகையில் கூட நாரந்தனைக் கிராமசபை, ஊர்காவற்றுறைப் பட்டினசபைகளின் முன்னாள் தலைவர்களான திரு. சு. கதிர்த்தம்பி, திரு ச. ம. அல்பிறெட் ஆகியோர் எழுதியிருந்த மக்கள் கருத்துப் பகுதியில் திரு. யோகேந்திராவின் அரசியல் சாணக்கியத்தைப் பாராட்டியுள்ளனர்.

இவர்கள் உட்பட இதுவரை ஊர்காவற்றுறைத் தொகுதி மக்கள் மட்டும் பல்லாயிரக் கணக்கானவர்கள் பாராட்டிவிட்டார்கள். இவர்களெல்லோரும் கடந்த தேர்தலுக்கு முன்னரே அவரது அரசியல் சாணக்கியத்தை உணர்ந்திருந்தால் அவர் ஊர்காவற்றுறைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக நிச்சயம் தெரிவு செய்யப்பட்டிருப்பார்: அவர் எம் பி. யாகவிருந்தால் மாவட்ட அமைச்சராகக் கூட ஜனாதிபதி தெரிவு செய்திருப்பார். காலங்கடந்தாவது ஊர்காவற்றுறை மக்கள் அவரது அரசியல் அறிவைப் புரிந்து கொண்டது பாராட்டுக்குரியதே.

எஸ். குகநாதன், கரம்பன்,
ந. சிவானந்தம், வேலணை,
ஜே. பாலச்சந்திரன், சரவணை.

---

### மனித வாழ்விற்கு சுகாதாரம் அவசியம்

[சங்கானை]

மனித சமுதாயத்திற்கு சுகாதாரம் முக்கியமானது சுகாதாரம் பேணிக்காக்கப்படாத இடங்களிலும் அதனை அலட்சியப்படுத்துவோரும் கொடிய பல நோய்களுக்கு ஆளாகி அவஸ்தைப்படுவதுடன் அந்த நோய் கிராமங்களிலும் அல்லாமல் நாடுபூராவும் பரவிவிடுமோவென அஞ்சப்படுவதையும் காண்கின்றோம். இதனாலேதான் அரசாங்கம் நாட்டு மக்களின் நன்மைகருதி பெருந்தொகைப் பணத்தை சுகாதார சேவைக்கென செலவிடுகின்றது.

இவ்வாறு சுகாதாரப் பரிசோதகர் திரு. ஏ. யோன் குடும்ப சுகாதாரக் கல்விச் செயற்திட்டம் பற்றி சங்கானை பட்டின சபை 4ம் வட்டாரத்தில் நிற்சமம் சரஸ்வதி சன சமூக நிலையத்தில் 2வது கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சுகாதார பரிசோதகர் தமது தலைமைஉரையில் மேலும் கூறியதாவது! குழந்தைகள் பிறந்ததும் சயரோகத் தடுப்பு மருந்து [பி. சீ. ஜீ] முக்கியமாக பிள்ளைகளுக்கு ஏற்றப்படுதல்வேண்டும்; அத்துடன் போலியோ தடைமருந்து ஒரு வருட காலத்தில் 3 முறை கொடுக்கப்படுதல், முக்கூட்டு இருகூட்டு ஏர்ப்புத்தடைக்கான மருந்துவகைகளும் காலாகாலத்தில் கொடுக்கப்படுவதால் பிள்ளைக்கு குக்கல் தொண்டைக்கரப்பன் ஏற்புவலி ஆகியவற்றிலிருந்து விடுவிக்க ஏதுவாகும்.

அல்லாமலும் பிள்ளை பிரசவித்து 6 மாசத்திற்கும் ஒரு வருட கால எல்லைக்குள் அம்மைப்பாலும் குற்றப்படுதல் அவசியம்.

பிள்ளைகள் சிறுபராயத்திலேயே நோயின்றி திடகாத்திரமாக இருப்பதற்கு மேற்குறிப்பிட்ட சிகிச்சைகளை தம் சிறார்களுக்கு பெற்றோர் கொடுப்பதற்கு சுகாதார பிரிவினர் எந்த வேளையிலும் சித்தமாகவுள்ளனர் எனவே தமது செல்வங்களான எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்விற்கு அரசு முன்வந்து கொடுக்கும் இந்தச் சேவையை நன்குபயன்படுத்த

(5 பக்கம் பார்க்க)

---

### தேனிருக்குந் தமிழில் தெரியுமுரு

எல்லை யிலாயின்பம் எனக்கரு ளுகின்றவா
நல்லை யரசாளும் நல்லதமிழ் மன்னவா
தொல்லை சுரும்பனைக் கொலைத்துநேர் வென்றவா
இல்லை யினித்துயரென் றினிக்கும் பெயர் முருகா!

அஞ்சு நிலைமாற அபயமளிக் கின்றவா
நெஞ்ச முன்நினைவாக நேரில்வரு கின்றவா
கொஞ்சு மொழியிருவர் கோலமது கொண்டவா
தஞ்சம் நீயென்பேன் தாங்கவேல் கொண்டுவா!

ஆவல் மிகவாகி அழுது புலம்புகிறேன்
பாவில் பலகோடி பாடிப் பரவுகிறேன்
காவல் நீயன்றிக் காக்கவெனை யாருண்டு
சேவற் கொடிதோன்றிச் செற்றமினி யெங்குண்டு!

கானிருக்கும் வன்னி காதலவன். மீதானும்
மானிருக்கும் கண்ணாள் மங்கையுளம் நீயானும்
தேனிருக்குந் தமிழில் தெரியுமுரு எனக்கானும்
யானிருக்கப் பயமேனென்றுன் ஞானமொழி
அருள்வாய்!!

--வி. ரி. தமிழ்மாறன்.

# சோஷலிஸ்டுகள் நடுநிலைமை வகிக்க வேண்டும்

## பெர்னாண்டஸ் கூறுகிறார்

[புதுடில்லி, ஆக. 12

சோஷலிசவாதிகள் ஜனதா கட்சிக்கும், சரண்சிங் கட்சிக்கும் கொடுக்கும் ஆதரவுகளை வாபஸ்வாங்கி நடுநிலைமை வகிக்கவேண்டும் என்று முன்னாள் கைத்தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

பம்பாயில் நடைபெற்ற சோஷலிஷவாதிகளின் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே திரு பெர்னாண்டஸ் மேற்கண்டவாறு கூறினார் ஒரு அரசாங்கத்தின் வேலைகளின் பெறுபேறுகளைப் பொறுத்தே மக்களின் ஆதரவு இருக்கும் என்றும் கட்சியை சீரமைப்பதற்காக நீண்டகாலம் காத்திருக்கத் தேவையில்லை என்றும் ஏற்கனவே மக்கள் பொறுமையை இழந்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்

ஜனதா கட்சியில் இறுதிக்காலத்தில் பணியாற்றுவது மிகுந்த சிரமமாக இருந்ததென்றும், இதற்கு இந்த தீவிரவாதிகளின் தீர்மானங்களில் தலையீடுகள் காரணமாயிருந்தன என்றும், சீரமைப்பு வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்றும் இனிசோஷலிசவாதிகள் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அஸாம் மாநிலத்தில் நான்கு சட்டசபை உறுப்பினர் ஜனதாவிலிருந்து ராஜினாமாச் செய்ததன்மையால் சட்டசபையில் ஜனதாவின் உறுப்பினர் தொகை 43 ஆகக் குறைந்துள்ளது. இங்கு மொத்த சட்டசபை உறுப்பினரின் தொகை 126 என்பது குறிப்பிடத்தக்கது. [கா]

எனது கணவருக்கு

## நோய் கூடியபோதிலும் வார்ட்டில் நிற்க அனுமதி இல்லை

### இறந்தவரின் மனைவி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

யாழ் ஆஸ்பத்திரி 16ம் வார்ட்டில் கட்டிலால் விழுந்த நோயாளி தர்மலிங்கம் மீண்டும் கட்டிலில் படுக்கவிட்ட ஐந்து நிமிடத்தில் மரணமானார்

இவ்வாறு யாழ் ஆஸ்பத்திரியின் 16ம் வார்ட்டில் மரணமான வதிரியைச் சேர்ந்த தர்மலிங்கம் என்று அழைக்கப்படும் கந்தசாமி தம்பராசா என்பவரின் மரணவிசாரணையின்போது, குறிப்பிட்ட தினத்தன்றுவார்ட்டில் கடமையில் ஈடுபட்டிருந்த தாதி திருமதி ஜசவதி இராமநாதன் சாட்சியமளிக்கையில் கூறினார்

அவர் மேலும் சாட்சியமளிக்கையில்,

'இம்மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நான் 16ம் வார்ட்டில் தனியாக வேலை செய்தேன். இந்நோயாளி மேற்படி வார்ட்டில் ஆண்கள் பகுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பெண்கள் பகுதியில் உள்ள நோயாளி ஒருவரைப் பார்க்கச் சென்றபோது ஆண்கள் பகுதியில் நின்ற கங்காணி பொன்னுத்துரை ஓடிவந்து "தர்மலிங்கம் கட்டிலில் இருந்து விழுந்துவிட்டார்' என்று கூறினார். ஆண்கள் பகுதிக்குச் சென்று பொன்னுத்துரையின் உதவியுடன் நோயாளியை கட்டிலில் தூக்கிப்படுக்கவைத்தேன். அதன்பின் டாக்டருக்கு அறிவித்தேன். கட்டிலில்படுக்கவிட்ட ஐந்துநிமிடத்தில் கட்டிலால் விழுந்த திரு. தர்மலிங்கம் மரணமானார்.

இறந்தவரின் மனைவி திருமதி சரஸ்வதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எனது கணவனுக்குக் கடந்த 77ம் ஆண்டு இடதுவிலாவில் நோய் ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை நடைபெற்றது. பின்சுகமாகி வீடுசென்றார் 78ம் ஆண்டு மீண்டும் நோய்கண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

கடந்த 3ம் திகதி வெள்ளிக்கிழமை நோய் அதிகரித்ததை அடுத்து எனது கணவர் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு 16ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டார்.

10ம் திகதி வெள்ளிக்கிழமை அவரின் உடல்நிலை மோசமாக இருந்தது. இரவு அவருடன் தங்குவதற்கு அனுமதி கேட்டோம் நோயாளியைத் தாம் கவனமாகப் பார்ப்பதாகவும் எவரும் ஆஸ்பத்திரியில் நிற்கத் தேவையில்லை என்றும் கூறி எவரும் ஆஸ்பத்திரியில் தங்க அனுமதிக்கப்படவில்லை.

அன்று இரவு நோய் மேலும் அதிகரிக்கவே பிராணவாயு ஏற்றப்பட்டது. அப்போது எங்களில் யாரையாவது ஒருவரை வார்ட்டில் நிற்பதற்கு அனுமதிக்கும்படி கேட்டோம். அதற்கும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது எனது கணவர் தமது மூக்கில் சொருகியிருந்த பிராணவாயு செல்லும் குழாயை பிடுங்கி எறிந்தார் அதன்பின் நாங்கள் வீடுசென்றுவிட்டோம். மறுநாள் [11ம் திகதி] காலை எனது கணவன் இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்தது [கொ-இ]

## வருடாந்த உற்சவம்

[பண்டத்தரிப்பு]

இல்லாலை புனித கதிரை மாதா ஆலய வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஒன்றரை லட்ச ரூபா செலவில் புதிதாக நிறுவப்பட்ட ஆலயகோபுரத்தில் தேவதாயாரின் கொடியை சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு. எஸ் இராசரத்தினம் அடிகளார் ஏற்றிவைத்தார். நாளை சற்பிரசாத விழாவும், 15ம் திகதி பெரிய பாடற்பூசையும், திருச்சொருப பவனியும் நடைபெறவுள்ளது. (க)


சக்தி

உடன்

நீடிய ஆயுள்




யு ஆ சா



பட்டரி ஏனைய எல்லாவற்றிலும் முன்னிற்கச் செய்கின்றது

தயாரிப்பாளர்:

அசோஸியேற்றட் பட்டரீஸ் கொம்பனி லிமிட்.

185, யூனியன் பிளேஸ், கொழும்பு-2

ஏக விநியோகஸ்தர்:-

ஈ. பி. கிறீசி அன்ட் கம்பனி லிமிட்

98, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு-10.

தொலைபேசி: 32715, 21311 — 4.

## 'மாக்பெற்' நிறுவனம் மண்ணெண்ணை வழங்குகிறது

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் நிலவிவரும் மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டை நீக்க "மாக்பெற்' நிறுவனம்" சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

கடந்த ஒரு வார காலமாக நிலவிவரும் மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டை நீக்க, யாழ் கஸ்தூரியார் வீதியிலுள்ள 'மாக்பெற்' நிறுவனம், தினமும் சொந்தமான எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணை வழங்கிவருகிறது.

தினமும் பெருந்திரளான மக்கள் வந்து மண்ணெண்ணை வாங்கிச் செல்கின்றனர்.

அங்கு கடமை புரியும். ஊழியரின் செயல் திறமையினால் சகல மக்களும் கியூவரிசையில் அதிகநேரம் காத்து நிற்காமல் மண்ணெண்ணையைப் பெற்றுக் கொள்கின்றனர்

'மாக்பெற்' யாழ் மாவட்ட நிர்வாக அதிகாரி திரு ஆர். எஸ் பஞ்சாட்சரத்தின் நிர்வாகத் திறமையினால், மண்ணெண்ணை விநியோகம் சீராக நடைபெறுகிறது. [அ]

## 7 பேரைக் கொன்ற மதயானை சேற்றில் பலி!

[யாழ்ப்பாணம்]

வன்னிப் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக ஏழுபேரை பலிகொண்டு, அட்டகாசம் புரிந்து வந்த மதயானை ஒன்று வன்னேரிக் குளத்தில் சேற்றினுள் புதைந்து மரணமானது

பழைய முறிகண்டி, அக்கராயன், வன்னேரிக்குளம், மற்றும் வன்னிப் பகுதியில் கடந்த பல வருடங்களாக அலைந்து திரிந்த இந்த யானை அப்பகுதியில் வாழ்ந்த ஏழு பேரைப் பலிகொண்டதுடன் அப்பகுதியிலுள்ள வயல்களையும், கமங்களையும் அழித்து மக்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கி வந்தது

மதயானையின் அட்டூழியத்தை தாங்க முடியாத மக்கள் பொலிஸ் நிலையத்திலும் உதவி அரசாங்க அதிபரிடமும் கிராம சேவகரிடமும் பலமுறை புகார் செய்தபோதும் யானையைக் கட்டுப்படுத்த முடியாமல் போயிற்று. [கொ]

## ஆசிரியர்களுக்கு நிர்வாக சேவையில் சேர வாய்ப்பு!

### 1,25,000 பேர் பயன்பெறுவர்

[கொழும்பு]

ஆசிரியர்களுக்கும் இலங்கை நிர்வாக சேவையில் சேருவதற்கு வாய்ப்பளிக்க அரசு தீர்மானித்துள்ளது

அரசின் இத்திட்டத்திற்கமைய ஆசிரியர் சேவையில் 10 ஆண்டுகள் சேவையாற்றியவர்கள் நிர்வாக சேவையில் சேர்ந்து கொள்வதற்கான பரீட்சை எடுக்க அனுமதிக்கப்படுவர்

இதனுல் தற்போது சேவையில் உள்ள ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஆசிரியர்களில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஆசிரியர்கள் பயன் பெறுவர் என கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார். (இ)

## குடும்ப சுகாதாரக் கல்வி செயல்திட்டக் கூட்டம்

(சங்கானை)

குடும்ப சுகாதாரக் கல்வி செயல் திட்ட தொண்டர்களுக்கான அங்குரார்ப்பணக் கூட்டம் சங்கானை பட்டண சபை 4-ம் வட்டாரத்தில் நிற்சாமம் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது

சங்கானை பகுதி சுகாதார பரிசோதகர் திரு ஏ. யோண் இக்கூட்டத்தை தொடக்கிவைத்தார் இப்பகுதி மருத்துவமாது எம். ஏ. ஜேசுநடேசன், சங்கானை ப. ச பிரதம லிகிதர் திரு கே, கதிர்காமத்தம்பி, நூல்நிலைய உதவியாளர் எம் கணேஷ் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்

சுகாதாரக் கல்வி செயல் திட்டத்திற்கு தெரிந்தெடுக்கப்பட்ட பகுதியை அறிவதற்கும் அக்கிராம மக்களின் செயல் திட்டத்திற்கு ஓர் செயற்குழுவை தெரிந்து நடைமுறைப்படுத்தவுமே குடும்ப சுகாதார கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்; தலைவர்: திரு எம் கணேஷ், உபதலைவர்: எஸ் செல்லத்துரை, காரியதரிசி: எம் இராசா, உபகாரியதரிசி: எஸ் நல்லதம்பி, பொருளாளர்: பி மகாதேவா, ஏழுபேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [க]

## 20 வீடுகளும் கட்டுடையில்

[பண்டத்தரிப்பு]

தேர்தல் தொகுதிகள் தோறும் புதிதாக 20 வீடுகள் நிறுவும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் புதிய திட்டப் பிரகாரம் மானிப்பாய்த் தொகுதியில் நிறுவப்படவுள்ள வீடுகளைக் கட்டுடையில் அமைப்பதற்கு மானிப்பாய்த் தொகுதி எம் பி திரு வி தர்மலிங்கம் சிபார்சு செய்துள்ளார் இவ்வீடுகளை நிறுவும்பொருட்டு கட்டுடைப் பகுதியிலுள்ள தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றை சுவீகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் வீடற்றவர்களுக்கென வழங்கப்பட்ட 10 வீடுகளும் கட்டுடையில் நிறுவப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [அ]

## சென்னையில் சி. எஸ்.

சென்னை, ஆக. 12

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் நேற்று சென்னை வந்துள்ளார்.

சரண்சிங்கின் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர் திரு. சுப்பிரமணியம் முதல் தடவையாக தமிழகம் வந்துள்ளார். [இ]

## நவ. 14 ல் பட்ஜட்!

[கொழும்பு]

நிதி அமைச்சர் திரு. ரோனி டி மெல் இவ்வாண்டு நவம்பர் மாதம் 14 ம் திகதி 79-80 ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். [இ]

Daily 5 Shows
**SHANTHI** JAFFNA Phone 7642
— N-B: ALTERED SHOW TIMES —
Daily 10-30, 2-15, 4-45, 7-15 & 9-45
THE DREADED ODESSA
Peter Miller is gone inside More than a few people hope he does'nt get out............ever!......
JON VOIGHT . Winner Best Actor Award 1979
with MAXIMILIAN SCHELL & MARY TAMM.
"THE ODESSA FILE"
Action - Suspense - Thriller - Scope - Color

**வின்சர்** போன்: 466
தினசரி 3 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10 30 2-00 6-00.
சோபன்பாபு - விஜயலலிதா நடித்த
**ரிவோல்வர் ரீட்டா**

**ராணி** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்) சிவாஜி-ஜமுனா
**நிச்சய தாம்பூலம்**
(புதிய பிரதி)

**ராஜா** தினசரி 4 காட்சிகள் (இன்றுமட்டும்)
யாழ். நகர் சிவாஜி - கே.ஆர். விஜயா
நடித்த
**நெஞ்சிருக்கும்வரை**
(புதிய பிரதி)
14-8-79 முதல் எங்க பாப்பா

**SRIDHAR-Jaffna ஸ்ரீதர்**
at 10-30 a m. 3-00. & 7-30 p.m.
AT LAST ITS BACK
The Greatest Motion Picture Of All Time
CECIL B DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
**TEN COMMANDMENTS**
**பத்துக் கற்பனைகள்**
(டெக்னிக் கலர் — ஆங்கிலம்)
Color
Starring; Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER
SEE THE PARTING OF THE RED SEA
THE MOST SPECTACULAR SCENE
EVER FILMED
செங்கடல் இரண்டாகப் பிரியும் காட்சி
தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளது

**மனோகரா** தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
மாதர் குலத்தின் அன்பான வேண்டுகோளுக்கு
இணங்கி மீண்டும் மூன்று தினங்கள் மட்டும்
13 முதல் 15 வரை காண்பிக்கப்படும்.
**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்**
(கலர்)
பார்த்தவர்கள் பார்க்காதவர்களுக்கு ஐயப்பனின் வரலாற்றைக் கூறி அவர்களுக்கும் மணிகண்டன் அருள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கும் ஐயப்பன் அனுக்கிரகம் உண்டாகும்.
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
சாமிசரணம்! ஐயப்ப சரணம்!!

**REGAL** (Jaffna)
Daily 10-30, a. m 2-00, 4-30, 7-00 p.m. only
No Passes Please
**THE OMEN**
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
விநாடிக்கு விநாடி உங்களை மெய்சிலிர்க்க
வைக்கும் பயங்கரப் படம்.
**"ஆவிகளின் அட்டகாசம்"**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

**வெலிங்டன்** தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45.
(யாழ்ப்பாணம்)
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
**ஔவையார்**

**வீ...** போன் 7698 தினசரி 4 காட்சி
(...)
**கல்யாணபரிசு**
(புதிய பிரதி)

"உணவு, உடையில்

# சுயதேவையைப் பூர்த்தி செய்து நாம்வாழவேண்டும்'

## மானிப்பாய் எம்.பி. உரை

(சங்கானை)

எமக்குத் தேவையான உணவு உடைமற்றும் ஆதியன வற்றை நாமே உற்பத்தி செய்து கிராம மக்கள் எல்லோரும் ஒரே குடும்பம்போல் எவ்வித குறையுமின்றி வாழ்வதை அடிப்படை நோக்கமாகக் கொண்டே சர்வோதய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது இந்த இயக்கத்தின் தந்தை தான் மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ்நாராயண் ஆவார்"

இவ்வாறு மானிப்பாய் தொகுதி எம். பி. திரு வி. தருமலிங்கம் மானிப்பாய் யாமா சந்தியில் சர்வோதயம் கிராமோதய அலுவலகத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து சர்வோதயக் கொடியை ஏற்றி வைத்துஉரையாற்றுகையில் குறிப்பிட்டார்

திரு ஞா. வேதீஸ்வரன் தலைமையில் விழா நடைபெற்றது,

திரு வி. தருமலிங்கம் தொடர்ந்து கூறியதாவது! இந்தியாவில் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டாலும் உலகரீதியில் பல நிறுவனங்கள், இயக்கங்கள் இதனை ஆதரிக்கின்றன.

பல வருடங்களுக்கு முன் ஆரம்பமாகி உலக ரீதியில் இயங்கி வருவதொன்றாகும்.

உணவு, உடை, கைத்தொழில் நிலையங்கள் போன்றவற்றை பின்தங்கிய கிராமங்களில் ஸ்தாபிப்பதால் சுய தேவை பூர்த்தியடைவதுடன் அரசையோ மற்றும் எவரையோ தமது தேவைகளுக்கு எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்படாது. சில சச்சரவுகள் பிணக்குகள் மக்கள் மத்தியில் ஏற்பட்டாலும் அவற்றை எம் மத்தியிலேயே தீர்க்க வேண்டும்.

மக்கள் மத்தியில் சுதேசஉற்பத்தி பொருட்களையே பாவிக்கும் நிலை ஏற்படுவதால் ஒருவர் இன்னொருவரை நம்பி வாழும் நிலை தவிர்க்கப்படும் எனவேதான் இந்நன்நாளில் ஆரம்பிக்கும் இந்த புனிதமான இயக்கத்திற்கு எல்லோரும் ஒத்துழைப்பை நல்கி கிராமத்தை வளக்க வேண்டும்,

குளமாவத்தை வயிரவர் ஆலய விசேட பூசையுடன் விழா ஆரம்பமானது வலி-தெற்கு உ-அ அதிபர் திரு ஏ சீ செபநாயகம் சனசமூக நிலையக் கொடியையும், காங்கேசன்துறை வைத்திய அதிகாரி இ தெய்வேந்திரம் இளம் விவசாயக்கழகக் கொடியையும் ஏற்றிவைத்தனர்.

யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. எஸ் சிவமுத்துலிங்கம் கூறியதாவது! மக்கள் செல்வமான கடின உழைப்பாலே தான் நாடு நன்கு உயர்வடையும் எதிர்கால சமுதாய வளர்ச்சி அந்தந்தக் கிராமத்தின் பொருளாதார மேம்பாட்டிலே தான் உண்டு. எனவேதான் கைத்தொழில் விவசாயம் போன்றவற்றிற்கு அரசு வங்கிமூலம் நிதிஉதவி வழங்குவுள்ளது. இந்த உதவியை பெற்று பயன்பெற மக்கள் முற்படல் வேண்டும் அல்லாமலும் சனத்தொகை பெருகிவருகிற இவ்வேளை வன்னிப்பகுதிகளில் இளைஞர்கள் குடியேறி தமது எதிர்காலத்தை செளிப்படைய செய்வதால் நாடும் நலம் பெறும்.

சுகாதார பரிசோதகர் திரு வி ஜீவரத்தினம் கூறியதாவது பொதுப்புணர்ச்சியை மறந்துவிட்டால் நாம் ஒரு சிறந்த சமுதாயமாக வாழமுடியாது. சிலர் பணத்தை மட்டும் பெரிதாக மதித்துத் தமது செல்வங்களான பிள்ளைகளையே கவனிக்காமல் விட்டுவிடுகின்றனர். போலியோ போன்ற நோய்களுக்கான மருந்துகளையும் அரசு இலவசமாக வழங்கியும், அதனைக் காலாகாலத்தில் எடுக்க

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய பலன்

ஆடிமாதம் 28 ம் திகதி
(திங்கட்கிழமை)
(13 8-1979

**மேடம்:** பக்கத்தில் படுகுழி பார்த்திருப்பவர் பகைவர் விழிப்புடன் இருப்பின் வெற்றி உண்டே.

**இடபம்:** இதயப்படுதாவில் இன்பக்கதிது, வாழ்க்கை செளகரியங்கள் நிறைந்ததாக இருக்கும், கற்றதனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும், நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

**மிதுனம்:** பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள், இதனால் விபரீதங்கள் தோன்றக்கூடும், மறைமுக எதிர்ப்புகளைச்சமாளிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம், முன்னெச்சரிக்கை நன்று.

**கடகம்:** வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும், மோகனவாழ்வு கிட்டும், முன்னேற்ற வழியும் தோன்றும்.

**சிங்கம்:** நீண்டநாட்களின் பின்பு இன்று நிறைவான தினம், எதிர்பார்த்த பொருள் கைகூடிச்சேரும், பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் குமாரவின் கல்யாணத்துக்கும், சுவையான சம்பவங்கள் இடம் பெறும்.

**கன்னி:** பொதியியலான குழும்பு பொன்னான தினம். புகழும் பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பம் உண்டு.

**துலாம்:** அரும்பிய காதல் இன்று கரும்புபோல் சுவைக்கும் பாரீர், விரும்பிய எண்ணம் போல நல்லவை நடக்கும் காணீர்.

**விருச்சிகம்:** அடுத்துக் கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர், சகோதர வழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம் பெறும், கடன்படநேரிடலாம், மனஅடக்கம் வேண்டும்.

**தனுசு:** மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு, தெய்வ நம்பிக்கையில் ஆர்வம் பிறக்கும், நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

**மகரம்:** தொழில் துறையில் நல்ல வருமானம் கிடைக்கும், வணிகர்களுக்கு ஆதாயம் கிடைக்கும், புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும், மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு.

**கும்பம்:** கற்றதனால்பயன் இன்று கிட்டலாம், அறிஞர்கள் போற்றுவர்.

**மீனம்:** பல வழிகளிலும் தொல்லைகள் தோன்றும், விரக்தி மனப்பான்மையுடன் நடமாடுவீர்கள், தொழில் புரியும் இடத்தில் எதிரிகள் மறைமுக நடவடிக்கைகளில் இறங்குவர், அவதானம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமதி க. வேலுப்பிள்ளை

## மனித...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

எவரும் தவறக்கூடாது

பல்நோய்தான் மிகக்கொடியது இதனை ஆரம்பத்திலேயே சிகிச்சைபெற்றுகுணப்படுத்தாவிட்டால் அதுஆபத்தை விளைவிக்கும்.

மற்றும்திரிபோசா குழந்தை உணவு, தாயின் கவனிப்பு, குடும்பநலத்திட்டம் பற்றியும் கூட்டத்தில் விளக்கப்பட்டது

சங்கானைப்பகுதி மருத்துவ மாதுக்கள் எம். ஏ. ஜெ. நடேசன், திருமதி பரமகுரு மற்றும் தொண்டர்படை உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்: (எ)

**வெல்லி**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-சுஜாதா
**உயர்ந்தவர்கள்**

**RIO** (Jaffna-TownHall)
Phone: 7607
Daily 10-30, 4-45,
7-00, 9-30 P. M.
Ryan O' Neal
Bruce Dern in
**DRIVER**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
**இன்ஸ்பெக்டர் மனைவி**

## "தரமுயர்த்த தகுதிவாய்ந்த வித்தியாலயம்"

(பண்டத்தரிப்பு)

"கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் வளர்ச்சி பெற்று முன்னேறிவரும் இந்த வித்தியாலயம் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்படுவதற்கேற்ற தகுதிகள் பலவும் இருக்கின்றன. ஆகவே இதனை விரைவில் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்துவதற்கு அதிபரும், ஆசிரியர்களும் இப்பகுதிப் பெற்றோர்களும் ஒருமித்து முயற்சிக்கவேண்டும்."

இவ்வாறு இளவாலை செய்கண்டான் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில், காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் குறிப்பிட்டார். வித்தியாலய அதிபர் திரு. க. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் புதிதாக நிறுவப்பட்ட விளையாட்டரங்கை திரு. சிவஞானசுந்தரம் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார். கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய அதிபர் திரு. வ. கந்தையா, பாடசாலை நலன் நோக்காளர் திரு. க. கதிர்காமத்தம்பி ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி இருபாசக்தி கதிர்காமநாதன் வழங்கினார். இப்போட்டியில் கலைமகள் இல்லம் முதலாமிடத்தையும், மலைமகள் இல்லம் இரண்டாமிடத்தையும், அலைமகள் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன. (எ)

சுன்னாகம் பகுதியில்

# வடிசாராயம் காய்ச்சுவோர் மீது பொலிசார் தீவிர கண்காணிப்பு

[பண்டத்தரிப்பு]

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் சட்டவிரோதமாக வடிசாராயம் காய்ச்சுபவர்கள் மீதும் சட்டவிரோதமாக அவற்றை விற்பனை செய்பவர்கள் மீதும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு பொன்னுத்துரை சுகுணேந்திரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி கடந்த சில மாதங்களாக நடத்திய தீவிர கண்காணிப்பை அடுத்து கள்ளச்சாராய உற்பத்தி ஒழிக்கப்பட்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

சுன்னாகம் பொலிஸ் பிரதேசத்திலுள்ள உடுவில், உரும்பராய், ஊரெழு, ஏழாலை போன்ற இடங்களில் வடிசாராயம் காய்ச்சும் கேந்திர நிலையங்கள் இரகசியமாக இயங்கி வருவதை அறிந்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு சுகுணேந்திரன் இப்பகுதிகளில் திடீர்வேட்டைகளை நடாத்திப் பலரைக் கைது செய்ததுடன் சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு உபகரணங்களையும் கைப்பற்றி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்.

திரு சுகுணேந்திரன் இது பற்றி தெரிவிக்கையில், வடிசாராயத்தில் மனிதரின் உடல் நலத்திற்கு மிகுந்த கேடு விளைவிக்கும் நஞ்சுப்பொருட்களான சரப்பான் பூச்சி, பல்லி, ஓணான், சிறுபாம்புகள், விஷ ஜந்துகள் ஆகியனவையும் கலந்திருப்பதால் மனித சமுதாயத்திற்கு பெரும் தீங்குகளை ஏற்படுத்துகின்றன என்றும், தனியார் வீடுகளிலும், தேநீர் கடைகளிலும் சட்டவிரோதமான முறையில் சாராயம் விற்பனை செய்து வருபவர்கள் பற்றிய விபரங்களையும் வடிசாராயம் தயாரிப்பவர்கள் பற்றிய விபரங்களையும் ரகசியமான முறையில் தமக்கு அறிவித்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றும் திரு. சுகுணேந்திரன் தெரிவித்தார். [வ]

# "பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவில்லை!"

## தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் மறுப்பு

[யாழ்ப்பாணம்]

"தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுச்சபைக்கூட்டம் எதுவும் அண்மையில் நடக்கவில்லை" என்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர், இணைச் செயலாளர், அமைப்பாளர் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றதாகவும், அதில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் திரு இ. செல்வநாயகம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டதாகக் கூறப்படும் அறிக்கை கடந்த சனிக்கிழமை வெளியான "ஈழநாடு" இதழில் கண்டு ஆச்சரியப்பட்டோம்.

"அண்மையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை என்பதையும் இதனுடன் அத்தகைய தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும் அக்கறையுள்ளவர்களின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம்.

கைதடிப் பிள்ளையார் கோவில் தேரிழுப்புச் சம்பவத்தையொட்டி எழுந்த இயக்கங்களின் போது மேற்கொள்ளப்பட்ட சாதிப் பட்டி இயக்கம், உண்ணாவிரதம் போன்ற இயக்கங்களை பகிரங்கமாக ஆதரித்து நின்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைக்கு மாசு கற்பிக்க முயன்றமை காரணமாக எமது இயக்கத்தின் பொதுச்சபையிலும் ஏற்கனவே தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருப்போரினால் மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எமது இயக்கமும் மற்றும் பல இயக்கங்களும் முன்னின்று மேற்கொண்ட முயற்சியின் காரணமாக உருவாகியுள்ள ஒடுக்கப்பட்டோர் ஐக்கிய முன்னணியையும், அம்முன்னணி நாடுபரந்த ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைகளையும் கண்டு சிலர் இவ்வியக்கங்களைப் பின்தள்ள எடுக்கும் முயற்சிகளின் வெளிப்பாடே இத்தகைய அறிக்கைகளாகும்" என்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம், இணைச்செயலாளர் திரு க. சுப்பையா, அமைப்பாளர் திரு. கே. டானியல் ஆகியோரால் கூட்டாக விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கொ]

பின்தங்கிய பகுதி

# தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமனம்

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், ஏனைய மாகாணங்களிலும் உள்ள பின்தங்கிய பகுதி தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதியிடமிருந்து கல்வியமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜேரத்தின அங்கீகாரம் பெற்றிருக்கிறார்.

இந்த நியமனங்களின் போது, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை பொறுப்பாக இருப்பார்.

ஏனைய மாகாணங்களுக்கு கிராமிய கைத்தொழிலமைச்சர் திரு. தொண்டமான் பொறுப்பாக இருப்பார்.

கல்வி அமைச்சர் தலைமையில் நடந்த மாநாட்டில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது. [க]

# அன்னதானமும் பரிசளிப்பும்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்க் கந்தன் சப்பரத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா ஆகிய மூன்று தினங்களிலும் வைமன் இந்து இயக்கத்தின் தாகசாந்தி நிலையத்தில் மாகேசுர பூசை நடைபெறவிருக்கிறது.

முதல்நாள் இரவு பலகாரவகைகளும் அடுத்த இருதினங்களில் அன்னதானமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நல்லை உற்சவத்தையொட்டி வைமன் இந்து இளைஞர் இயக்கத்தினர் நடாத்தும் சமய அறிவுப் போட்டியில் பரிசு பெறுபவர்களுக்கு தீர்த்தத் திருவிழாவான இம்மாதம் 22ம் திகதி வைமன்வீதியில் உள்ள தாகசாந்தி நிலையத்தில் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும். சமயபாடப் பரீட்சை விடைகள் இம்மாதம் 15ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [வ]

# பாவனையாளர் சங்கம் உதயம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பாவனையாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பண்டத்தரிப்புக் கிராமசேவை அலுவலர் தலைமையில் நடைபெற்ற போது கீழ்க்காணும் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: எம். ஆர். தர்மலிங்கம், செயலாளர்: எம் எம் கந்தசாமி, பொருளாளர்: கு அ குலசிங்கம், நிர்வாகசபை உறுப்பினர்: சாமுவேல் பெனடிக், எஸ் அந்தோனிப்பிள்ளை, வி செல்வத்துரை, க கந்தசாமி, இ கணேசரத்தினம், வே சின்னராசா.

# சுயதேவை...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

அலைக்கழிக்கப்பட்டுப் பின் சிவம் பூரணவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவேதான் நமதும், நாட்டினதும் நன்மை கருதி தடுப்புமருந்துகளை எடுத்து நாட்டின் சுகாதாரத்தையும் காக்கவேண்டும்."

இருவர் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க)

# ஆசிரியர்கள் பிரச்னை

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு எஸ். கே வனசிங்கா, பொதுச் செயலாளர் திரு த மகாசிவம் ஆகியோர் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு திமாணிக்கவாசகரைச் சந்தித்து வடபிராந்தியத்தில் ஆசிரியர்களுக்கு இருக்கும் பிரச்னைகள் பற்றி கலந்துரையாடினர். இச்சந்திப்பின்போது பல விஷயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

எல்லா விஷயங்களுக்கும் தான் உடனடியாக தீர்வு காண்பதாக கல்விப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார்.

# ரூ. 40,000

(1ம்பக்கத்தொடர்ச்சி)

ரத்தினம், பொன் மகேந்திரன் ஆகியோர் புலன்விசாரணையில் ஈடுபட்டு முறைப்பாட்டுக்காரரின் மகனையும் அவரது நண்பரையும் கைது செய்து சம்பந்தப்பட்ட பொருள்களில்பெரும்பகுதியை யாழ் நகரிலுள்ள சில கடைகளிலிருந்து மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான மொரடீன், அனிஸ் ஆகியோர் யாழ் நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு ஜி.பிரராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மற்றொரு சந்தேகநபரான நிசாமைப் பொலிசார் தேடிவருகின்றனர். [கொ]

# குடும்பப் பகை; ஒருவர் பலி!

## ஏழாலையில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

இரு குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம், கைகலப்பாக மாறி மரணத்தில் முடிந்துள்ளது இச்சம்பவம் ஏழாலை மேற்கில் நிகழ்ந்துள்ளது.

ஏழாலை மேற்கு புளியங்கிணற்றடியைச் சேர்ந்த தம்பு தயாகுலம் [32 வயது] அடிகாயங்களுடன் அபாயகரமான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். இவரது மரண விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றபோது மரணமானவரின் மைத்துனர் செல்லையா தேவராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"எங்களுக்கும் சந்தேகநபரான வேலுப்பிள்ளை தம்பிராசாவுக்குமிடையே நீண்டகால மாகப் பகை இருந்தது. எங்களுக்கிடையே அடிக்கடி சண்டை மூளும்போதெல்லாம் சுன்னாகம் பொலிசார் தலையிட்டு இருபகுதியினரையும் சமாதானம் செய்துவைப்பார்கள். கடந்த சனிக்கிழமை பகல் எதிரி தம்பிராசா மரணமான எனது அத்தானுடைய வீட்டிற்குச் சென்று அக்காவை கெட்டவார்த்தைகளால் பேசியதாக அறிந்து நான் அத்தானிடம் கூறினேன், அவர் கத்தியுடன் எதிரியின் வீட்டிற்குச் சென்றார் நானும்பொல்லுடன் அவருக்குப் பின்னால் சென்றேன். அத்தான் எதிரியைக் கூப்பிட்டார். இருவருக்கும் இடையில் வாக்குவாதம் நடைபெற்றது பின்னர் அத்தான் எதிரியைக் கத்தியால் வெட்டினார். எதிரி தம்பிராசா கையில் வைத்திருந்த பொல்லால் அத்தான் தயாகுலத்தின் தலையில் ஓங்கி அடித்தார். தலையில் அடி விழுந்ததும் இரத்தம் ஆறாக ஓடியது. அவர் நிலத்தில் மயங்கி விழுந்துவிட்டார். நான் அவ்விடத்தை விட்டு ஓடிச்சென்று கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் அத்தானை தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றேன். அவரைப் பரிசோதனை செய்த டாக்டர் உடனடியாக யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும்படி தெரிவித்தார். யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குக்கொண்டுசென்று அனுமதித்தோம். அதே இரவு ஆஸ்பத்திரியில் மரணமானார்" என்று கூறினார்.

மரணவிசாரணை அதிகாரியும், உத்தியோகப்பற்றற்ற நீதவானுமான திரு எஸ். எஸ். பிரான்சிஸ் பிரேத பரிசோதனை செய்யுமாறு பணித்து சந்தேக நபரை இன்றுவரை காவலில் வைக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டு விசாரணையை இன்றுவரை ஒத்திவைத்தார். [கொ]


## மக்கினென் டிரவல் சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்

## Mackinnon ravel Ser vice (Ceylon) Ltd

தங்களது இனி ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சுற்றுலாக்கள்
- பாஸ்போர்ட்
- விசா

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

## மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!


## மரண அறிவித்தல்

### திருமதி பருவதம் துரையப்பா

நல்லூர் வைமன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்வம் துரையப்பாவின் அன்பு மனைவி பருவதம் காலமானார் இவர் கனகசுந்தரம், சரஸ்வதி ஆகியோரின் அன்புத்தாயாரும், ரஞ்சிததேவி, கனகவேல் ஆகியோரின் பேத்தியுமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று (13-8-79) பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். 3295

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No 49, Telegram: Eelanadu
T.Phone: 389.